பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 11 2025 12 40

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்தியா – ஆசியான் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவானது என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. ஆதாரில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தனித்துவ அடையாள ஆணையம் எளிதாக்கியுள்ளது.

4. வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 5 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

5. இந்தோனேஷிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் துளசிமதி முருகேசன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-- இனி விரிவான செய்திகள் ---

மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்பதை தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சத்தீஷ்கர் மாநிலம் நவா ராய்ப்பூரில் பிரம்மகுமாரிகள் அமைப்பின் தியான மையத்தை திறந்து வைத்து அவர் பேசினார்.

சத்தீஷ்கர் உட்பட பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், சம்பந்தப்பட்ட மாநிலம் மற்றும் யூனியன் பிரதேச மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் பிரம்மகுமாரிகள் அமைப்பு முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் எந்த பகுதி பேரிடரால் பாதிக்கப்பட்டாலும் அப்பகுதிக்கு உதவும் முதல் நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

உலக அமைதிக்காக இந்தியா பாடுபட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

>><><><><><<

இந்தியா – ஆசியான் இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவானது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்று வரும் ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளுதல், மனிதவள மேம்பாடு போன்றவையும் பாதுகாப்பு ஒத்துழைப்பில் ஒரு அங்கமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா தயாராக உள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>><><><><><<

“ஆரோக்கியமான பெண்கள் - வலிமையான குடும்பம்” இயக்கம் மூன்று கின்னஸ் உலக சாதனைகளை படைத்திருப்பது பெருமிதம் அளிப்பதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கடந்த செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி வரை இந்த இயக்கம் நடத்தப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்த இயக்கத்தின்கீழ் 19 லட்சத்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதாகவும், இதன்மூலம் 11 கோடிக்கும் மேற்பட்டோர் பயனடைந்திருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மகளிரின் சுகாதார நலனை பாதுகாக்கும் வகையில், இந்த இயக்கம் மேற்கொள்ளப்பட்டதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

>><><><><><<

வணிக ரீதியிலான சமையல் எரிவாயு விலை சிலிண்டருக்கு 5 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த விலை குறைப்பு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன. விமான எரிபொருள் விலை ஒரு சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

>><><><><><<

யுனெஸ்கோவின் பாரம்பரிய படைப்பாற்றல் மிக்க நகரங்கள் பட்டியலில் உத்தரப்பிரதேசத்தின் லக்னோவும் இணைந்துள்ளது.

உஸ்பெகிஸ்தானின் Samarkant-ல் நடைபெற்ற யுனெஸ்கோவின் பொதுச்சபைக் கூட்டத்தில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறுசுவை உணவு பிரிவில், லக்னோ நகரம் இந்த சிறப்பை பெற்றுள்ளது.

>><><><><><<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ் குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள காணொலி செய்தியில் தமது தலைமையிலான அரசு பீகாரின் வளர்ச்சியை உறுதி செய்திருப்பதாக கூறினார்.

சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியின் வேகத்தை மேலும் அதிகரிப்பதற்கு தங்கள் கூட்டணிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பீகார் மாநிலத்தை சேர்ந்தவர் என்று கூறுவது தற்போது பெருமைக்குரியது என்றும் திரு நிதிஷ்குமார் தெரிவித்தார்.

>><><><><><<

அஸ்ஸாமில் தொழில் புரிவதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

குவஹாத்தியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இதன் காரணமாக தொழில் முதலீடுகள் அதிகரித்து வருவதாக கூறினார்.

முதலீட்டாளர்கள் மாநாட்டில் பெறப்பட்ட ஒரு லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள், அடுத்த மாதம் செயல்பாட்டிற்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு. ஹிமந்த பிஸ்வ சர்மா கூறினார்.

>><><><><<

ஆந்திரா, சத்திஷ்கட், கர்நாடகா, கேரளா, மத்தியப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்கள் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது

இதனையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் தலைவர்கள் பலர் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

>><><><><<

கேரளாவில் தீவிர வறுமை முற்றிலும் அகற்றப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரள மாநிலம் உருவான தினம் இன்று கொண்டாடப்படும் வேளையில், அம்மாநில சட்டப்பேரவையில் இதற்கான அறிவிப்பினை அவர் வெளியிட்டார்.

இந்த நாள், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் அவர் கூறினார்.

நாட்டிலேயே வறுமையை முற்றிலும் ஒழித்த முதலாவது மாநிலமாக கேரளா திகழ்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம். தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் திரு. பினராயி விஜயன் தெரிவித்தார்.

>><><><><<

ஆகாஷவாணி ராய்ப்பூரின் மாநில செய்திப்பிரிவு 25 ஆண்டுகளை பூர்த்தி செய்து 26 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

இதனையொட்டி சத்தீஷ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய் வெளியிட்டுள்ள செய்தியில், அரசு நிர்வாகம் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் ஆகாஷவாணி செய்திகள் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆகாஷவாணி செய்திகள் மாநிலத்தின் கடைகோடி வரை சென்றடைவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அரசின் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஆகாஷவாணி செய்திகள் ஆற்றிவரும் பணி பாராட்டுதலுக்குரியது என்று அவர் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளிலும் ஆகாஷவாணி செய்திப்பிரிவு இதேபோன்று துடிப்புடன் செயல்படும் என்று தாம் நம்புவதாகவும் திரு விஷ்ணு தியோ சாய் கூறினார்.

>><><><><><<

ஆதார் பதிவுகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான நடைமுறைகளை எளிதாக்கும் நோக்கில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதாக தனித்துவ அடையாள ஆணையம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஆதாரில் பெயர், விலாசம், பிறந்த தேதி மற்றும் கைப்பேசி எண்களில் மாற்றங்களை அதற்கான இணைய தளத்தில் மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஆதார் மையங்களுக்கு செல்ல வேண்டிய தேவை இல்லை என்றும் தனித்துவ அடையாள ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த நடைமுறை இன்றுமுதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>><><><><><<

தெலங்கானா வளர்ச்சிக்கு எதிர்க்கட்சிகள் தடையாக உள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார்.

Jubilee Hills சட்டப்பேரவைத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி, காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தெலங்கானாவில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்ற பின்னர் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத்திட்டங்களையும் திரு ரேவந்த் ரெட்டி பட்டியலிட்டார்.

>><><><><<

பாதுகாப்புத் துறையின் நிதி ஆலோசகராக திரு ராஜ்குமார் அரோரா இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

கணக்கு மற்றும் தணிக்கைத் துறையிலும், பணியாளர் மேலாண்மையிலும் நிபுணத்துவம் பெற்ற அவர், தற்போது இப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

ஆசிய பசிபிக் பொருளாதார அமைப்பின் உச்சிமாநாடு அடுத்த ஆண்டு சீனாவில் நடைபெறும் என்று அந்நாட்டு அதிபர் திரு. Xi Jin Ping அறிவித்துள்ளார்.

தென்கொரியாவின் Gyeongju-வில் நடைபெற்ற நடப்பாண்டுக்கான இந்த மாநாட்டின் நிறைவு கூட்டத்தில் அவர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

அடுத்த ஆண்டு இந்த உச்சிமாநாடு Shenzhen-ல் நடைபெறும் என்றும் திரு. Xi Jin Ping கூறினார்.

>><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

இந்தோனேஷிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் துளசிமதி முருகேசன் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 21-16, 21-15 என்ற செட்கணக்கில் ஃபிரான்ஸின் Maud Lefort-ஐ வென்றார்.

மற்றொரு ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Manisha Ramdass 21-19, 21-9 என்ற செட்கணக்கில் டென்மார்க்கின் Cathrine Rosengran-ஐ வென்று இறுதியாட்டத்திற்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் நவீன் சிவக்குமார் 22-20, 21-12 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Hikmat Ramdani-ஐ வென்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றார்.

இதர ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டங்களில் Shashank Kumar மற்றும் சிவராஜன் சோலைமலை வெற்றிபெற்று, இறுதியாட்டத்திற்கு முன்னேறினர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Abu Hubaida – Prem Kumar Alu இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் கிருஷ்ணா நாகர் - நித்யஸ்ரீ சுமதிசிவன் இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

----------------

மங்களூர் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Ashmita Chaliha இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

----------------

ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழகம் - விதர்பா இடையேயான ஆட்டம் கோயம்புத்தூரில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் தமிழகம் சற்றுமுன் வரை முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 81 ரன் எடுத்துள்ளது.

--------------

பெங்களூருவில் நடைபெற்று வரும் இந்தியா-ஏ அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3வது நாளான இன்று சற்றுமுன் வரை தென்னாப்பிரிக்கா-ஏ அணி இரண்டாவது இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்பிற்கு 136 ரன் எடுத்துள்ளது.

>> End of News <<